செயற் குறிப்பு ஒன்று இருந்தது. இதற்கு மத்திய அரசிடமிருந்து நிதியுதவியை இந்த அரசு கோரியது. நிதியுதவி வழங்குவதற்கு இயலாதென மத்திய அரசு தெரிவித்து விட்டதால் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : இந்தத் திட்டத்தின் சிறப்பு அம்சம் என்ன ? எந்த மாடலில் இம்மாதிரி ப்ளானடேரியம் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ப்ளானடேரியம் அமைப்பதற்கான ஒரு முயற்சி முன்பு எடுக்கப்பட்டது. அதற்கு கிழக்கு ஜெர்மனியைச் சார்ந்த ஒரு நிறுவனம் 18 இலட்ச ரூபாயும் தர முன்வந்தார்கள். ப்ளானடேரியம் பத்திலிருந்து பதினைந்து மீட்டர் விட்ட அளவில் அமைந்திருக்கும். இது 300 பேர் தாங்கும் அளவுக்கு இருக்கக் கூடும். இது அமைத்தால் ஒரு நாளைக்கு ஏழு காட்சிகள் காட்டலாம் என்ற தன்மை தெரிவிக்கப்படுகிறது. கல்கத்தாவிலும் பம்பாயிலும் இப்படிப்பட்ட ப்ளானடேரியம்கள் இருக்கின்றன. அது மட்டுமல்லாமல், இந்த பதினெட்டு இலட்ச ரூபாயோடு கட்டடம் மற்றவைகளுக்கு ரூ. 5,25,000 ஆகும் என்று மதிப்பிடப்படுகிறது. அதைத் தவிர, தொடரும் செலவு ரூ. 1,30,000 ஆகும். இதற்கு மத்திய அரசு மானிய உதவி அளிக்க வேண்டும் என்று நாம் கேட்டோம். இப்படிப்பட்டவைகளுக்கு மானிய உதவி அளிக்க வாய்ப்பு இல்லை என்று மத்திய அரசு தெரிவித்து விட்டது. நாமே ஏற்றுக்கொள்ளலாமா என்று பார்த்தால், நிதி நெருக்கடியின் காரணமாக இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள இயலாமல் ஒத்திவைத்திருக்கிறோம். ஆனால், தனியார் கம்பெனி ஒன்று அதை வைக்கக் கருத்து தெரிவித்திருக்கிறது. அதை அரசு ஆராய்ந்துகொண்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த ப்ளானடேரியம் மேல் நாடுகளில் பல நகரங்களில் இருக்கின்றன. இந்தியாவில் கூட இருக்கிறது. சாதாரணமாக உள்ளே இருந்து பார்க்க ஆரம்பித்தால், ஐந்து நிமிஷம் பார்த்த பிறகு, எங்கே இருக்கிறோம் என்று மறந்து போகிறது. ப்ளானடேரியம் அமைக்கும் யோசனை இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. இது குறித்து முயற்சி எடுத்தது ரொம்ப வரவேற்கத்தக்கது. இருந்தாலும், முயற்சியைக் கைவிடாமல், தனியாருக்கும் கொடுக்காமல், அரசு ஜி.டி.ஆர். உதவியோடு இந்த ஆண்டாவது இதை அமுலுக்குக் கொண்டுவருமா ? ஒலி–ஒளிக் காட்சி இப்படித்தான் கைவிடப்பட்டது. அம்மாதிரி நிலை இதற்கு ஏற்படாமல், இதற்கு அரசு ஆவன செய்யுமா ?

1975 ஏப்ரல் 15]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நாமே செய்ய வேண்டுமென்றுதான் மத்திய அரசு இதற்கு நிதி உதவி அளிக்க வேண்டும் என்று ஸயன்ஸ் அண்டு டெக்னலஜி துறையிலிருந்து கேட்டோம். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு இல்லை என்று அவர்கள் குறிப்பிட்டு விட்டார்கள். ஆகவே, நாமே முயற்சி செய்யலாம் என்றால், இதற்கு முப்பது இலட்ச ரூபாய் செலவாகக்கூடும். நிதி நெருக்கடி காரணமாகத்தான் அதை நாம் ஒத்திவைத்திருக்கிறோம். ஆனல், பம்பாயிலுள்ள மெசர்ஸ் ராஜ் அண்டு கம்பெனி ரூ. 50.5 இலட்ச மதிப்பீட்டுச் செலவில் இந்த ப்ளானடேரியம் வைக்கத் தயாராயிருப்பதாகவும், அதற்கான இடம் ஒதுக்கித்தர வேண்டும் என்றும் கேட்டதோடு, கிழக்கு ஜெர்மனியிலிருந்து கருவிகள் வரவழைப்பதற்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இடம் ஒதுக்குவதுபற்றி எந்த வகையில் ஒதுக்கலாம் என்று அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. நம்மிடத்தில் பணம் இருந்தால், திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் கூறுவது மாதிரி, நாமே வைத்துவிடலாம். ப்ளானடேரியம் எப்படியேனும் வர வேண்டும் என்ற கருத்து இருப்பதால், எது நமக்கு எளிதாக இருக்கக்கூடும் என்பதை ஆராய்ந்து அதற்கேற்ற முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கல்கத்தாவிலும் இந்த ப்ளானடேரியம் சிறப்பாக அமைந்திருக்கிறது. அங்கு பல்வேறு காட்சிகள் டூரிஸ்ட் இலாக்காவின் மூலமாகக் காட்டப்பட்டு, மக்கள் கண்டு களிக்கிறார்கள். டூரிஸ்ட் இலாக்காவில் உள்ளவர்கள் இதற்குச் சிறந்த ஊக்கம் அளிக்கிறார்கள். அதேமாதிரி நமது மாநிலத்திலும் டூரிஸ்ட் இலாக்கா ஊக்கம் அளித்து, இதைப் புனராலோசனை செய்து, தமிழகத்தில் மத்தியமான இடத்தைத் தெரிந்தெடுத்து, அங்கே இதை அமைக்க அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ப்ளானடேரியம் வரவேண்டும் என்பதில் இந்த அரசு மிக முன்னிப்பாக இருக்கிறது. அது வந்தால் நம்முடைய நாட்டு மக்களுக்கு அறிவியல், வானவியல் முதலியவற்றைக் கற்றுக்கொடுக்க மிக எளிதாக இருக்கும். அதன் மூலமாக புதுப் புது விஞ்ஞானக் கருத்துக்களைப் பரப்புவதற்கு மிக எளிதாக இருக்கும். இப்படிப்பட்ட ப்ளானடேரியம் வரவேண்டுமென்று விரும்புகிறோம். அதை நாமே செலவிட்டு வைப்பதா அல்லது தனியாருக்கு விடுவதா என்பதுதான் பிரச்சினையாக இருந்து வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே ருஷ்யாவும் சென்னையும் நட்புறவு நகரங்களாகக் கருதப்படுகின்றன. அப்படிப்பட்ட அயல் நாட்டு நகரங்கள் நமக்கு உதவி செய்ய சில

நேரங்களில் முன்வருகின்றன. சில நேரங்களில் இனமாகக்கூடக் கொடுக்க முன்வருகின்றன. . அப்படி இருக்குமானால், அந்த நட்புறவு நகரங்களுக்கு எழுதி, இந்தப் ப்ளானடேரியத்தை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதற்கான வழிவகைகள் இல்லை. பிற நாட்டார் இனமாகத் தந்தாலும் கூட, இந்திய அரசினர் இனமாகத் தருவதற்கு ஒப்புக் கொள்வதில்லை. அப்படி இனமாகத் தந்தாலும் கூட, மத்திய அரசு விலையை நிர்ணயித்து, விலையிட்டு தருகின்ற முறைகள்தான் இருக்கின்றன. ஆனால், அந்த ப்ளானடேரியத்தை மிகச் சிறப்பாக அமைக்கின்ற நாடாக ஈஸ்ட் ஜெர்மனி இருக்கிறது. ஆகவேதான், ஈஸ்ட் ஜெர்மனியோடு நாம் தொடர்பு கொண்டிருக்கிறோம்.

சூலூரில் சுற்றுலா மாளிகை.

*663 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு கல்வி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூரில் சுற்றுலா மாளிகை கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

பொதுப்பணித்துறையின் கீழுள்ள ஏரிகள்.

*664 வினா—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 200 ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்யும் ஏரிகளை அரசு பராமரிப்பில் ஏற்றுக்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், தஞ்சை மாவட்டத்தில் அது போல் எடுத்துக்கொள்ளக்கூடிய ஏரிகள் எவை, எவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) 200 ஏக்கருக்கு மேல் ஆயக்கட்டுள்ள ஏரிகள் ஏற்கெனவே அரசின் பராமரிப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.